சுருக்கம்

பள்ளிக் கல்வி – மேல்நிலைப் பள்ளிகள் – தொழிற்கல்வி – 680 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை-I பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது – தற்போது பணிபுரிந்து வரும் 115 தொழிற்கல்வி பயிற்றுநர் பணியிடங்களுக்கு – 01.10.2021 முதல் 30.09.2022 வரை ஓராண்டிற்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (பக7(1))த் துறை

அரசாணை (1டி) எண்.245

நாள்: 10.12.2021
திருவள்ளுவர் ஆண்டு – 2052
பிலவ வருடம், கார்த்திகை-24

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.358, பள்ளிக் கல்வித் துறை, நாள் 18.8.1997.
2. அரசு கடித (நிலை) எண்.221, பள்ளிக் கல்வித்(விஇ) துறை, நாள்.15.07.1999.
3. அரசாணை(2டி) எண்.46, பள்ளிக் கல்வித்(விஇ) துறை, நாள் 12.09.2006.
4. அரசாணை (நிலை) எண்.69, பள்ளிக் கல்வித்(விஇ) துறை, நாள் 20.03.2007.
5. அரசாணை (1டி) எண்.192, பள்ளிக் கல்வித்(பக7(1)) துறை, நாள் 03.12.2020.
6. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண்.053086/எல்/இ3/2021, நாள் 06.10.2021.

*******

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (DIET) மூலம் குறுகிய கால பயிற்சி பெற்ற பகுதி நேர தொழிற்கல்வி ஆசிரியர்களை முறையான ஊதிய விகிதத்தில் கொண்டு வரும் பொருட்டு உபரியாக இருந்த 702 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை சரண் செய்து அதற்கு பதிலாக அதே ஊதியம் கொண்ட 702 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை-II பணியிடங்கள் தற்காலிக அடிப்படையில் ஆணை வெளியிடப்படும் நாள் முதல் ஓராண்டு காலத்திற்கு மட்டும் அமலில் இருக்கும் வகையில் ஏற்படுத்தியும், அப்பணியிடங்களை தேவைக்கேற்ப அனுமதிப்பது பற்றி முடிவு செய்ய பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி ஒன்று முதல் மூன்று வரை படிக்கப்பட்ட அரசாணைகள் மற்றும் அரசு கடிதத்தின்படி 680 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை-II பணியிடங்கள் பள்ளிக் கல்வி இயக்குநரால் தேவைக்கேற்ப கீழ்கண்டவாறு ஏற்படுத்தப்பட்டுள்ளது:-

(த.பி.பா.,)

| | | |
|---|---|---|
| அரசாணை (நிலை) எண்.358, பள்ளிக் கல்வித் துறை, நாள் 18.8.1997. | 557 | 5.10.1996 முதல் |
| அரசுக் கடிதம் (நிலை) எண்.221, பள்ளிக் கல்வித் துறை, நாள் 15.7.1999. | 111 | 12.11.1997 முதல் |
| அரசாணை (2டி) எண்.46, பள்ளிக் கல்வித் துறை, நாள் 12.9.2006. | 12 | 8.12.1999 முதல் |
| மொத்தம் | 680 பணியிடங்கள் | |

2. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி தொழிற்கல்வி ஆசிரியர் நிலை-I ஆக நிலை உயர்த்தப்பட்ட 680 தொழிற்கல்வி ஆசிரியர் பணியிடங்களில் ஒய்வு பெற்றவர்கள் போக மீதமுள்ள 115 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை-I பணியிடங்களுக்கு மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 01.10.2020 முதல் 30.09.2021 வரை தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி ஆசிரியர்களுக்கு அரசாணை (நிலை) எண்.303, நிதி(ஊதியக்குழு)த் துறை, நாள் 11.10.2017-ன்படி ரூ.36400-115700 என்ற ஊதிய தொகுப்பில் தற்போது ஊதியம் அனுமதிக்கப்படுகிறது என்றும், மேற்காணும் பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்புக் காலம் 30.09.2021 உடன் முடிவடைந்துள்ள நிலையில் தற்போது 115 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை-I பணியிடங்களுக்கு 01.10.2021 முதல் 30.09.2024 முடிய மேலும் 3 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குமாறு மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, மேலே பத்தி 1ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகளின்படி தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 680 தொழிற்கல்வி ஆசிரியர் (நிலை-I ஆக நிலை உயர்த்தப்பட்ட) பணியிடங்களுள் ஓய்வு பெற்றவர்களின் பணியிடங்கள் 565 போக மீதமுள்ள இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 115 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை-I பணியிடங்களுக்கு 01.10.2021 முதல் 30.09.2022 வரை ஓராண்டிற்கு மட்டும் தொடர் நீட்டிப்பு வழங்க முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. இப்பணியிடங்களில் பணிபுரிபவர்கள் அடிப்படை ஊதியம் உள்ளிட்ட பணப்பலன்களை நடைமுறையில் உள்ள விதிகளின்படி பெறத் தகுதியானவர்களாவர். இப்பணியிடங்களுக்கான ஊதியம் மற்றும் படிகளுக்கான செலவினம் கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

<u>அரசுப்பள்ளிகள்</u>

2202 பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி-109 அரசு இடைநிலைப் பள்ளிகள்-மாநிலச் செலவினங்கள் –AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம்-301-சம்பளங்கள்
(த.தொ.கு.2202 02 109 AA 30100)

(த.பி.பா.,)

<u>நகராட்சி/மாநகராட்சி பள்ளிகள்</u>

2202 பொதுக்கல்வி -02 இடைநிலைக் கல்வி -109 அரசு இடைநிலைப் பள்ளிகள்- மாநிலச் செலவினங்கள் –AB நகராட்சி மற்றும் மாநகராட்சி இடைநிலை / மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் – 301 சம்பளங்கள்
(த.தொ.கு.2202 02 109 AB 30100).

<u>அரசு உதவி பெறும் பள்ளிகள்</u>

2202 பொதுக் கல்வி -02 இடைநிலைக் கல்வி - 110 –அரசு சாரா இடைநிலைப் பள்ளிகளுக்கு நிதி உதவி- மாநிலச் செலவினங்கள் –AA அரசு மானியம் பெறும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு நிதியுதவி – 379 சம்பள மானியங்கள்
(த.தொ.கு.2202 02 110 AA 37900).

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 48942/கல்வி II/ நாள் 07.12.2021-ல் பெற்ற அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 79/35/5.
சார் சம்பளக் கணக்கு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
கருவூல கணக்கு அலுவலர், சென்னை-5.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.
<u>**நகல்**</u>
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
நிதித்(கல்வி II) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

ந.க.எண் 053086/ எல்/ இ3/ 2021, நாள்: 21.12.2021
(நகல்) தகவலுக்காகவும், தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது.
பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

இணை இயக்குநர் (நா.ந.தி.),
பள்ளிக் கல்வி ஆணையரகம்,
சென்னை-600 006.